தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2024 கும்பம் (பிப் — I) விலை உருபா 1·50 (இதழ் எண்: 161)

தமிழினத்திற்கு எதிரான பார்ப்பனக் கொடுநெறி! இந்துவெறி செயலலிதா ஆட்சியின் அடாத செயல்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார், பழ.நெடுமாறனார், பொழிலன் 'தடா'வில் சிறை!

பல இயக்கங்கள்–தலைவர்கள் கடுங் கண்டனம்!

உலகத் தமிழின முன்னேற்றக் கழக நிறுவனர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனார், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க ஒருங்கிணைப்பாளர் மா.பொழிலன் ஆகியோர் அடக்குமுறை 'தடா' சட்டத்தின் கீழ்ச் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழினத்திற்கு எதிரான பார்ப்பனக் கொடு-நெறி இந்துவெறி செயலலிதா ஆட்சியின் அடாத செயல் தொடர்கிறது!

மக்கள் கல்வி இயக்க அமைப்பாளர் திண்டிவனம் பேராசிரியர் கல்யாணியையும் செயலலிதாவின் காவல்துறை சீண்டியுள்ளது.

Scanned with CamScanner

காவல் நிலையத்தின் இழி செயல்!

பாவலரேறு அவர்களின் திருக்குறள் மெய்ப்பொருள் உரைச்சுருக்கம் நூல்,வரும் மார்ச்சு மாதம் 14-ஆம் நாள் வெளியிடப்பட விருக்கிறது. இதற்காக அவர் இரவிலும் விடியற்காலை வேளையிலும் உரை எழுதிக் கொண்டிருந்தார். 17-3-93 அன்றும் விடியற்காலையில் அவர் அவ்வாறு அவ்வரிய தமிழ்ப் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுதுதான் மயிலாப்பூர் நிலையக் காவலர்கள் அவரை 'உசாவலுக்கு' என்று கூறி அழைத்துச் சென்றனர். அவருடன் அவர்தம் மகனார் திரு பொழிலன் (த ஒ.வி.இ.)சென்றார். நெடுநேரம் ஆகியும் அவர்கள் திரும்பாதது கண்டு அவர்தம் குடும்பத்தினர், இயக்கத்தினருக்குச் செய்தி தெரிவித்து காவல் நிலையம் சென்று உசாவினர். அவர்கள் இருவரையும் தளைப்படுத்தியிருப்பதாகவும் சென்னை சைதாப் (சையதுப்) பேட்டை வழக்கு மன்றம் அழைத்து வருவதாகவும் தெரிவித்தனர். தமிழீழத் தலைவர் திரு. கிட்டு அவர்களின் சாவுக்குக் காரணமான இந்திய வெறி அரசினைக் கண்டித்து மறு நாள் கண்டன ஊர்வலம் ஒன்றிற்கு தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்திருந்தது இதற்காகவே முன் எச்சரிக்கையாக இவர்களைச் சிறைப்படுத்தியுள்ளதாகக் காவல் நிலையத்தினர் தெரிவித்தார்கள்.

பாவலரேறு அவர்களையும் திரு. பொழிலனையும் சந்தித்துப் பேச இயக்கத்தினருக்கும் குடும்பத்தினருக்கும் இசைவளிக்கப்படவில்லை. அவர்கள் இருவரையும் அரசியல் சிறையாளிகள் போல நடத்தாமல் கொலை, திருட்டுக் குற்றவாளிகளை நடத்துவது போல ஒளிப்படப் பிடிப்பாளரை வரவழைத்து இருவரையும் பல கோணங்களில் ஒளிப்படம் எடுத்தனர். பிறகு கை மற்றும் விரல்கள் அடையாளங்களையும் எடுததனர்.

காவலர் ஆய்வாளர் தெரிவித்ததன் பெயரில் இயக்கத்தினரும் குடும்பத்தினரும் சைதாப் பேட்டை வழக்கு மன்றத்திற்குச் சென்று காத்துக் கொண்டிருந்தனர். இதற்கிடையில், இவர்கள் இருவரையும் திரு. நெடுமாறன் அவர்களையும் 'தடா' சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தியிருப்பதாக மாலை செய்தி ஏடுகளில் செய்தி வந்து விட்டது. வழக்கு மன்ற நேரம் முடிந்து மாலை 6-30 ஆகியும் இவர்களை வழக்கு மன்றத்திற்கு அழைத்து வராதது கண்டு மறுபடி மயிலைக் காவல் நிலையத்திற்குச் சென்று உசாவியபோழுது பிற்பகல் 3 மணிக்கு சென்னை உயர்வழக்கு மன்ற வளாகத்திலுள்ள, முதன்மை அமர்வு மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விட்டதாக உதவி ஆய்வாளர் தெரிவித்தார். செய்தித்தாள் வழி தடா சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தம் என்று அறிந்திருந்ததால்" "தடா' வழக்கு மன்றம் தானே?" என்று வினவியபோது வாய்திறவாமல் அமைதியாகிவிட்டார்.

நேரம் கடந்து விட்டதனால்! சென்னை நடுவண் சிறைக்கு இயக்கத்தினரும் குடும்பத்தினரும் சென்றபோது பாவலரேறு அவர்களும் திரு. பொழிலனும் மாலை 4.30 மணியளவில் சிறையில் அடைக்கப்பட்டு விட்டதாக செய்தி தெரிந்தது.

கடைசிவரை இவர்களைச் சந்திக்கவிடாமலும் கொலைக் குற்றவாளிகளைப் போல நடத்தியும் சைதாப்பேட்டை வழக்கு மன்றம் என்று போக்கு காட்டியும் காவல் துறையினர் தம் அடிமை வேலையை அழகாக செய்து காட்டினர். O

(முன் பக்கத் தொடர்ச்சி)

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் நிறுவனரும்,தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்களின் ஆசிரியருமான பாவலரேறு பெருஞ்சித்திரனாரையும் அவர் தம் மகனார் திரு. மா. பொழிலனையும் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்) சென்னை-மயிலாப்பூர் காவல் நிலையத்தினர் இன்று (27-1-93) விடியற்காலை 5 மணியளவில் இல்லத்தில் உசாவலுக்கு என்று கூறி அழைத்துச் சென்றனர். பிறகு மாலையில் வழக்கு மன்றத்தில் நிறுத்தி 'தடா' அடக்குமுறைக் கறுப்புச் சட்டத்தின் கீழ் சென்னை நடுவண் சிறையில் அடைத்தனர்.

இவ்வாறே மதுரையில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு பழ. நெடுமாறனார் அவர்களையும் இக் கறுப்புச் சட்டத்தின் கீழ் தளைப் படுத்தியுளளது, தமிழினத்திற்கு எதிரான பார்ப்பன செயலலிதா அரசு.

தலைவர்களின் மீதான தமிழக அரசின் அடாத செயலினை பல தமிழின முற்போக்கு—புரட்சி இயக்கங்களும்—தலைவர்களும் கண்டித்து செய்தி அறிக்கை வெளியிட்டுள்ளனர். இவ் வியக்கங்கள் இக் கொடுஞ் செயலகளை கண்டித்தும் அவர்களை விடுதலை செய்யுமாறு எச்சரித்தும் தமிழகம் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளனர்.

கண்டன அறிக்கைகள்

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ச. இராமதாசு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

(அறிக்கைகளின் சொற்கள் மாறாமல் அவ்வாறே கொடுக்கப்பட்டுள்ளது)

"அண்மையில் தமிழர் தலைவர்கள் பலரைத் தமிழக அரசு எவ்வித உசாவல் செய்யாமலே ஓராண்டு கடுஞ்சிறையில் வைக்கும் 'தடா' என்கிற தீவிரவாதிகள் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது.

நரிகளின் வேட்டைக் காடாகிவிட்ட தமிழ் நாட்டில் இனி நாய்களுக்குக் கூட அழவோ, குலைக்கவோ அனுமதி மறுக்கப் படலாம். ஊர்ப்

பணத்தை உச்ச வரம்பில்லாமல் கொள்ளையடிக்கிற உத்தமமான தலைவர்கள் நாதியற்ற தமிழர்களுக்காக யார் குரல்கொடுத்தாலும் அவர்களது குரல்வளையை நெரிப்போம் என்பதற்கு நேரிடையான சான்றுதான் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்கள், அவர் மகன் பொழிலன் ஆகியோரைத் 'தடா'வில் கைது செய்திருப்பதும் பேராசிரியர் பா.கல்யாணியைக் கைது செய்திருப்பதுமாகும். இந்தியாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைப்பற்றி அண்மையில் அமெரிக்கா கூட அம்பலப்படுத்தி இருந்தது.

''நாயைக் கொல்வதானால் அதற்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகக் கூறிக் கொன்றுவிடு'' என்கிற வெள்ளை வல்லாண்மை மனப்பான்மையைப் போல், தமிழ், தமிழர் நலன்களில் அக்கறையுள்ளவர்களை ஒடுக்கவே எங்கோ நடக்கின்ற நிகழ்ச்சிகளோடு தொடர்புபடுத்தி இன்று பழி வாங்குகிறார்கள். நமது அடிப்படை உரிமைகள் அரசியல் சட்டத்தோடு சரி, நடைமுறையில் அவற்றைக் காண முடியாது போலும்.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காகப் பஞ்சாப் காசுமீர் பகுதிகளுக்காக 1983-இல் கொண்டுவரப்பட்ட இந்த அடக்குமுறைச் சட்டத்தை வைத்துச் சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டில் சீராக உள்ளதென்று அண்மையில் கூட நெடுஞ்செழியனை விட்டு அறிக்கை விடத்தெரிந்த தமிழக அரசு, இன்று எவ்வித தீவிரவாதத்திலும் இதுவரை ஈடுபடாத தமிழறிஞர் தலைவர்கள் மீது பொய்வழக்கு போட்டிருப்பது கேலிக்குரியதாகவும் முரண்பட்டதாகவும் இருக்கிறது.

தமிழ் நாட்டிற்குத் தடா தேவையற்றது என்பதே நமது கருத்து என்றும் 'தராசு' 'நக்கீரன்' இதழ் அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்து கொலை சூறையாடல் செய்தவர்கள் மீதோ, ஐ.ஏ.எஸ். அதிகாரி மீது திராவகத்தை வீசிய சுர்லா மீதோ அல்லது அதைச் செய்யத் தூண்டிய பெரும் புள்ளி மீதோ பாயாத 'தடா' சட்டம் மனித உரிமைக்காகவும், தமிழர் நலன்களுக்காகவும் குரல் கொடுக்கின்ற தலைவர்களின் மீது பாய்வது வேடிக்கையாகவும், வேதனையாகவும் உள்ளது.

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு அன்றாடம் வேட்டு வைத்துக் கொண்டிருக்கிற ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவெறியர்கள் யார் மீதாவது இதுவரை 'தடா' பாய்ந்ததுண்டா? நான்காம் நாள் பர்மா தமிழர், மூன்றாம் நாள் இலங்கை தமிழர், நேற்று கர்நாடகத் தமிழர் இன்று பம்பாய்த் தமிழர் என்று சோகக் கதை தொடர்கதையாகி நீண்டு வருகின்ற தமிழர்களின் பாதுகாப்பிற்கு வழி சொல்லத் தெரியாத வக்கற்றவர்கள், அடிபடும்போது அழுகிறவனின் வாயை மட்டும் அடைக்கத் துடிப்பது என்ன நேர்மை என்பது புரியவில்லை. எல்லா நாடுகளிலும் சென்று நம்மால் பணத்தைக் கடன் வாங்கத் தெரிந்த அளவிற்கு, மனித உரிமைகளை மதிக்கும் பண்புகளைக் கற்கத் தெரியவில்லை.

புயலைப் புட்டியில் அடைத்துப் பார்க்க எண்ணும் அறிவாளி போல் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் தமிழர்களின் உணர்வுகளோடு விளையாட நினைத்தது முட்டாள்தனம் என்பதைப் பிற்காலத்தில்தான் உணர்ந்து இந்த வல்லாண்மைகள் திருந்துவார்கள் என்று நினைக்கிறேன்.

தமிழர் தலைவர்களையும், நல்ல தமிழ் நெஞ்சங்களையும் கைது செய்துள்ள இந்த அரசின் தமிழின எதிர்ப்புப் போக்கை மிக வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழர் நலனில் அக்கறையுள்ள அனைவரும் அவர்களை விடுதலை செய்யக்கோர வேண்டுகிறேன். ○

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் **மணியரசன் அவர்கள்** விடுத்துள்ள கண்டன அறிக்கை:

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், பெருஞ்சித்திரனார், பொழிலன் ஆகிய மூவரையும் தமிழக அரசு 'தடா' சட்டத்தில் கைது செய்துள்ளதைத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டுவின் மரணத்திற்குக் காரணமான இந்திய அரசின் நடவடிக்கையைக் கண்டிப்பதற்கு ஆலோசனைக் கூட்டம் கூட்டியதையே குற்றமாக எடுத்துக் கொண்டு தமிழக அரசு நெடுமாறனைக் தடாவில் கைது செய்துள்ளது.

இதேபோல் பொருத்தமற்ற காரணங்களுக்காகப் பெருஞ்சித்திரனாரையும், பொழிலனையும் தடாவில் கைது செய்துள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கும் கருத்துரிமைக்கு எதிரான சர்வாதிகார நடவடிக்கை இது.

மூவரையும் நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். ○

மக்கள் உரிமைக் கழகத் தலைவர் பி.வி. பக்தவச்சலம் விடுத்துள்ள கண்டன அறிக்கை :-

இந்தியாவில் பல மாநிலங்களில் தமிழகம் உள்பட இன, தேசிய, மொழி மற்றும் அதன் மக்கள் அடக்குமுறை மற்றும் சட்ட விரோத கருப்புச் சட்டங்களுக்கு இறையாகி சிறைவாழும் நிலைமை ஏற்பட்டு உள்ளது. மொத்தத்தில் நாடே திறந்த வெளிச் சிறையாக்கப்பட்டு மக்களாட்சி குழி தோண்டி புதைக்கப்பட்டிருக்கிறது.

மொழி, இனம், தேசிய உரிமைகளை கோருவது குடியாட்சி நாட்டில் சட்ட எதிரான அரசுக்கு

எதிர்ப்பான செயல்என அடக்குமுறையைப் பயன்படுத்துவது அதிகாரக் கொடுங்கோல் ஆட்சிகளில் தான் நடக்கும்.

தமிழினத்திற்கான உரிமைகளுக்காகப் போராடும் தலைவர்கள் **நெடுமாறன், பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் **பொழிலன்** மற்றும் பேராசிரியர் **கல்யாணி** ஆகியோரைக் கைது செய்திருப்பது என்பது மக்களாட்சிக்கு எதிரான அடக்குமுறைச் செயல் மட்டுமல்லாது உலக ஒன்றிய நாடுகள் சபையின் 'ஒரு தேசம் ஒரு அரசு' தீர்மானம் கொடுத்துள்ள தன்னுரிமை என்கிற அரசியல் உரிமையைப் பறிக்கும் செயலும் உலக நாடுகளின் மனித உரிமை மீறலுமாகும்.

உலக ஒன்றிய பொது மன்னிப்புக் கழகம் இந்தியாவில் மீறப்படும் மனித உரிமைகளைக் கண்டித்து ஆதாரப் பூர்வமான அறிக்கை விட்டிருப்பதும்; இந்திய தமிழக அரசுகள் இதை மீறி இருப்பதும் இவற்றின் தன்னதிகார பாசிசப் போக்கை அம்பலப்படுத்துகிறது.

எனவே, மேற்படி தலைவர்களின் தளை நடவடிக்கைகளை மக்கள் உரிமைக் கழகம் வன்மையாக கண்டிப்பதுடன் அனைத்து மக்கள் கட்சிகளும், இயக்கங்களும் இத்தகைய மனிதஉரிமைமீறல்களை கருத்துரிமை பறிப்பு ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் கண்டிக்க முன்வர வேண்டும் என்று அறை கூவல் விடுகிறது". O

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கை:

தமிழகத்தை ஆண்டு வருகிற பார்ப்பன செயலலிதா அரசு தமிழகத்தின் மீது தனது திட்டமிட்ட ஒடுக்கு முறையை அதிகரித்து வருகிறது.

தமிழ் மொழி இன நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வரும தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர். **பொழிலன்** நேற்று 21-1-93 காலை 5.00 மணியளவில் தமிழக அரசின் காவல் துறையினரால் 'தடா' சட்டத்தின் கீழ்க் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று தனித்தமிழ் அறிஞரும், 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின முதல்வருமாகிய பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடு**மாறன்**, மக்கள் கல்வி இயக்கத் தோழர் பேரா.பா. **கல்யாணி** ஆகியோரும **'தடா'** சட்டத்தின கீழ் கைது செயயப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய கொடிய தமிழின ஒடுக்குமுறைச் செயலகளைச் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது. தடாவில் கைது செய்யப்பட்டுள்ள அனைவரையும் உடனே விடுவிக்க வேண்டுமெனவும் தமிழக அரசை எச்சரிக்கை செய்கிறது. O

தமிழ்நாடு, புரட்சிகர இளைஞர் முன்னணியினர் விடுத்துள்ள கண்டன அறிக்கை:-

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்ததாகவும் தமிழக விடுதலை கோரிப் பிரிவினைப் பிரச்சாரம் செய்ததாகவும் சனவரி 25 அன்று நடைபெற்ற குண்டு வெடிப்புகளுக்கு உடந்தையாக இருந்ததாகவும் இன்னமும் குண்டு வெடிக்க சதி செய்வதாகவும் கூறி தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன், தமிழறிஞர் பெருஞ்சித்திரனார், திரு. பொழிலன் உட்படப் பலரைப் பார்ப்பன இயக்கம் செயலலிதா அரசு தடாவில் கைது செய்திருப்பதைப் புரட்சிகர இளைஞர் முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது; அவர்களை நிபந்தனையின்றி உடனே விடுதலை செய்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம்.

மத்தியிலும் தமிழகத்திலும் (பார்ப்பன ராவ்—செயா கும்பல்) உள்ள தரகு பார்ப்பனிய ஏகாதிபத்தியவாதிகள் தமிழ்த் தேசிய இனம் உட்பட பல்வேறு தேசிய இனங்களை 'இந்திய தேசியத்தைக்' காட்டி ஒடுக்குவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்; தெற்காசியாவில் உள்ள பிற தேசிய இனங்களையும் நாடுகளையும் கூட ஒடுக்கி வருகின்றனர்.

தமிழர், தமிழக உரிமை பற்றி பேசினாலே தடா பாய்கிறது; பிரிவினைவாதம் என வாழப்பாடிகள் கூச்சலிடுகின்றனர். விடுதலைப் புலிகள் உட்பட உலகத்தில் உள்ள எந்த இயக்கத்தை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் அவரவர் மக்கள் நாயக உரிமை. ஈழமக்களின் விடுதலைப் போராட்டம் தமிழகத்திலும் அதன் தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. அதை நசுக்கும் பொருட்டு விடுதலைப் புலிகளை ஆதரிப்பதைக் காரணம் காட்டி இங்குள்ள தமிழ்த் தேசிய பற்றாளர்கள் மீது அடக்கு முறையை ஏவி விடுகின்றனர். விடுதலைப் புலிகள் மற்றும் புரட்சிகர ஈழப் போராளிகள்மீது அடக்குமுறையை ஏவுவதன் மூலம் தமது 'அகண்ட பாரத'க் கனவுக்கு அடிபணியச் செய்யவும் முயற்சிக்கின்றனர். அதற்காக, தமிழகத்தை நோக்கிப் புலிகளின் அந்த தனியொரு கப்பல் வந்ததாகவும், இந்தியாவில் தலைவர்களைக் கொன்றும்,குண்டுகளை வெடித்தும் வன்முறையைத் தூண்ட திட்டமிட்டிருப்பதாகவும், அதற்கு இங்குள்ள தமிழினப் பற்றாளர்கள் உடந்தையாக இருப்பதாகவும இட்டுக்கட்டிய காரணங்களைக் கூறி அடக்குமுறையை ஏவி விடுகின்றனர்.(தாங்களாகவே குண்டு வெடிப்புகளையும், ரயில் கவிழ்ப்புகளையும் நடத்திக் கொண்டு புரட்சியாளர்கள் மீது

அடக்குமுறையை ஏவிவிடுவது தமிழக காவல் துறைக்குப் பழக்கமான ஒன்றுதான்). இத்தகைய அடக்குமுறைகளால் தமிழக விடுதலையை நோக்கிய தமிழக உழைக்கும் மக்களின் பயணத்தையோ ஈழவிடுதலை பயணத்தையோ தடுத்துவிட முடியாது.

—இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறிவியக்கப் பேரவையின் சார்பில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அது பற்றிய விளக்கம் வருமாறு:-

பாவலரேறு பெருஞ்சித்திரனாரைத் தடாச் சட்டதின் கீழ்க் கைது செய்திருப்பதை அறிவியக்கப் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக, 7-2-93ல் அறிவியக்கப் பேரவையின் ஆட்சிக்குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் வருமாறு:

"உயர்ந்து ஓங்கிய சோலைகளுக்கு உறுதி சேர்க்கும் வயிர வேங்கைகளும் அழகாக எழுந்து நிற்கும் பந்தலுக்கு ஊற்றுதுணையாக விளங்கும் பந்தல்காலகளும் போன்றவர்கள் அறிஞர்கள். ஓர் இனத்தின பெருமை அந்த இனத்தில் தோன்றும் அறிஞர்களைப் பொறுத்தே இடைவற்றுமல் வளர்கிறது. இந்த உண்மையை உணராமலும், மூத்த அறிஞர்கள் மற்றவர்களின் குறைகளைக் கடுமையாகக் கூட இடித்துரைக்கும் உரிமை உடையவர்கள் என்னும் சிறப்பை மதியாமலும் அவர்களைக் கைது செய்து காவலில் வைப்பதால் அவர்கள் நடத்திவரும் மக்கள் நல அறிவுப்பணி பெரிதும் தடைப்படுகிறது. அறிஞர்கள் வாழும் காலத்தில் இத்தகைய அடாத செயல்களில் ஈடுபட்டுவிட்டு, அவர்கள் கண்ணை மூடிய பிறகு, அய்யோ; இந்த அறிவுச் செல்வத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் போனோமே" என்று ஒரு மயானப் புலம்பல் புலம்புவது நம்முடைய அரசுகளுக்கு ஒரு வழக்கமாகவே போய்விட்டது. இந்த அறியாமைத்தொடர் இன்னமும் நீடிக்கக்கூடாது என்று வலியுறுத்துவதுடன், தடாச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள தமிழகத்து மூத்த அறிஞர்களில் ஒருவரான பெருஞ்சித்திரனாரை எந்த நிபந்தனையும் இல்லாமல் உடனேயே விடுதலை செய்ய வேண்டும் என்று அறிவியக்கப் பேரவை தமிழக அரசைக் கண்டிப்பாக வலியுறுத்துகிறது.

—இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. O

நெடுமாறனார்-- கல்யாணி விடுதலை!

திரு. நெடுமாறனாரைத் 'தடா' பிரிவின் கீழ் தளைப்படுத்திய வழக்கிலும் காவல் துறையின் பொய்ம்மையும் கயமையும் கீழ்மையும் வெளிப்பட்டன. அவர் 18-1-93இல் வன்முறையைத் தூண்டிவிட்டார் என்பதாக ஒரு சான்றுரைரை பொய்ச் சான்று தெரிவிக்க வைத்தனர். ஆனால் அந்த நாளில் அவர் சிறையிலிருந்துள்ளார் என்பது வழக்கு மன்றத்தில் வழக்கறிஞர் திரு.கலைமணி அவர்கள் தெரிவித்து வழக்காடினார். காவல்துறையினரின் குட்டு உடைய நடுவர் பொய் வழக்கு என்று கூறி பிணையலில் விடுவித்தார்.

மக்கள் கல்வி இயக்க முன்னோடியும் திண்டிவனம் அரசினர் கல்லூரி பேராசிரியரும் ஆன திரு பா.கல்யாணி மக்கள் சிக்கல்களுக்கான போராட்டங்களில் ஈடுபடுவதைத் தடுக்க எண்ணிய தமிழக அரசு அவரை வெளியூருக்கு இடப்பெயர்வு செய்தது. பிறகு மாணவா போராட்டத்தினாலும வழக்கு மன்ற ஆணையினாலும் தன் ஆணையை அது விலக்கிக் கொள்ள வேண்டி நேர்ந்தது. இதனால் அவரைப் பழிவாங்க காலம் பார்த்துக் காத்திருந்த அரசு விழுப்புரம் காந்தி சிலை தகர்ப்பை காரணம் காட்டி அவரை தளைப்படுத்தியது. செய்தியறிந்த மாணவர்களும் பொதுமக்களும் திரண்டு ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் நடத்தினர்.

'தடா' பிரிவின் கீழ் அவரைச் சிறையிலிட அரசு செய்திருந்த முடிவினை இதனால் மாற்றி வேறு பிரிவின் கீழ் வழக்கு மன்றத்தில் நிறுத்தியது. திரு.பவணந்தி (த.தே.பொ.கட்சி) வழக்கறிஞர் தலைமையில் வழக்கறிஞர்கள் அவர்மேல் போடப்பட்டுள்ள பிரிவுகளின்படி இந்திய அரசு அல்லது மாவட்டக் காவல் அலுவலர்தான் தளைப்படுத்த முடியும். உள்ளூர் காவல் ஆய்வாளர் சிறைப்படுத்தியிருப்பது முறையற்றது என்று வழக்காடினர். மாணவர் எழுச்சியாலும் முறையற்ற தளைப்படுத்தத்தினாலும் அவரை அரசு விடுவிக்கவேணடியிருந்தது. பேரா. கல்யாணியிடம் மறுபடியும் தோற்றுள்ளது அரசு. O

வழக்குச் செலவுகள்-ஒரு வேண்டுகோள்!

பார்ப்பனக் கொடுநெறி அரசு தமிழர் உரிமைக்காகப் போராடிவரும் நம் பாவலரேறு மீதும் அவர் தம் மகனார் மீதும 'தடா' என்னும் கொடிய அடக்குமுறைச் சடடத்தை ஏவி சிறையிலடைத்திருப்பதை அன்பர்கள் அறிவார்கள். இவர்களிருவரையும் பிணையலில் வெளியே கொண்டு வருவதற்கும் தொடாந்து வழககு நடக்கும பொழுது அதை நடத்துவதற்கும் பொருள் தேவை எனபதை அன்பர்கள் உணர்வார்கள்.

ஆகவே வழக்குச் செலவுகளுக்குப் பங்கேற்று கழகத்தினரும் அன்பர்களும் ஆர்வலர்களும் நன்கொடை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—அமைச்சர்.

Scanned with CamScanner

'தமிழ்த் தேசிய இன மக்களின் விடுதலை'-என்பது குமுகப் படிநிலை வளர்ச்சியின் இடைநிலைக் கட்டமும் வரலாற்றுக் கட்டாயமுமாகும்!

—க. கண்ணன். அறி. இ, கரடிப்பட்டி.

முன்னுரை:- ஒரு தனி மாந்தனை அடையாளப் படுத்துவதற்காக எவ்வாறு ஒரு பெயரைச் சுட்டி அழைக்கின்றோமோ, அவ்வாறே, இவ்வுலகில் ஒரு பகுதி நிலப்பரப்பில் பொது மொழியாலும், பண்பாட்டாலும், பொருளியல் உறவுகளாலும், உளவியல் தன்மைகளாலும் கட்டமைக்கப்பட்டுத் தொடர்ந்து வாழ்கின்ற மக்களை, அம் மொழியை அடிப்படையாகக் கொண்ட ஒரு மொழித் தேசிய இனமாக அழைக்கின்றோம். மாந்த இனம் தன் வளர்ச்சிப் போக்கில் பல தேசிய இனங்களாக மலாச்சியுற்று இருந்தாலும், தங்களை அடையாளப் படுத்திக்கொள்ள முடியாத-வெளிப்படுத்த முடியாத நிலையில் பல தேசிய இனங்கள் மற்ற சில தேசிய இனங்களின் ஆளுமையால் அழுத்தப்பட்டுக் கிடக்கின்றன. அத்தகைய அடிமை இனங்களில் தமிழ்த் தேசிய இனமும் ஒன்றாகும். குமுக, அரசியல், பொருளியல் நிலைகளில் பல்வேறு கூறுகளாகவும் கருத்து வேறுபாடுகளிலும் பிளவுண்டு கிடக்கின்ற தமிழ்த் தேசிய இன மக்கள், தங்களை ஒருங்கிணைத்துக் கொண்டு தங்கள் அடிமைத் தளைகளை அகற்ற '*தமிழ்த் தேசிய இன விடுதலை*'- என்ற குவிமுனையை நோக்கி வருவது என்பது குமுகப் படிநிலை வளர்ச்சியின் இடைநிலைக் கட்டமும் வரலாற்றுக் கட்டாயமுமாகும். தங்கள் மன உணர்வுக்கும் அறிவுணர்வுக்கும் ஏற்ப தங்களின் அரசியல் சார்புகளை உருவாக்கிக் கொண்டு வெவ்வேறு திசையில் இயங்குபவர்கள் பின்வரும் கருத்து விளக்கங்களை எண்ணிப் பார்ப்பார்களாக. பொதுவாகக் குமுக வரலாற்றையும் சிறப்பாகத் தமிழ்த் தேசிய இன மக்களின் வரலாற்றையும் ஒரு கோணத்திலிருந்து மட்டும் பார்க்காமல், பல கோணத்திலிருந்து ஆய்வு செய்து இறுதியில், இன்றைய காலக்கட்டத்தில் நாம் செல்ல வேண்டிய வழியைத் தீர்மானிக்குமாறு வேண்டுகிறோம்.

சாதி: ஒரே மொழியையும் பண்பாட்டையும் கொண்ட தமிழ்த் தேசிய இனம் பல சாதிகளாகப் பிரிந்து கிடக்கின்றது. இந்தச் சாதிப் பிரிவினை மனவியல் சார்ந்த அறியாமை நிறைந்த மதவியல் கட்டமைப்போடும் இனவியல் மற்றும் பொருளியல் சார்ந்த அரசியல் கட்டமைப்போடும் ஆரியப் பார்ப்பனியத்தாலும் தரகு முதலாளியத்தாலும் கட்டிக் காக்கப்படுகிறது. குமுகச் சம நிலையை ஏற்படுத்துவதற்கு இச்சாதியம் மிகப் பெரும் தடையாக இருக்கின்றது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒன்றையொன்று அடிமைப் படுத்திச் சுரண்டி ஆளுமை செய்த இனக்குழுக்கள் முழுமையாகச் சிதையாமல் இச்சாதிய உளவியல் உணர்வுகள் தொடாந்து நிலை பெற இன்றைய இந்திய அரசு பல்வேறுக் சூழ்ச்சிகளை கையாண்டு வருகிறது. இச்சாதியப் பிரிவினைக்கு, ஒரு தனித் தனியான—ஒன்றுக் கொன்று—ஏற்றத் தாழ்வான குமுக மதிப்பும் வகுப்பு(வர்க்க)ப் பின்னணியும் இருப்பதால், இன்று இந்தியா முழுவதும் ஒவ்வொரு சாதியும் தனித்தனியாக அணி சேர்க்க முயலுகின்றனர். இந்த அணிச்சேர்க்கை மாந்தனின் மொழி, பண்பாடு, பொருளியல் உறவுகள் போன்ற பல்வேறு உணர்வுக் கூறுகளை முழுமையாக இணைக்க முடியாமலும், முழுமையான குமுக மாற்றத்தைச் செய்யக் கூடிய குமுக இயங்கியலுக்கு எதிராகவும் இருப்பதை அவ்வியக்கங்களில் தொடர்புடையோர் உணர்வர். அதனாலேயே சாதியை மட்டும் அடிப்படையாகக் கொண்ட இயக்கங்கள் எந்த ஒரு குமுக மாற்றத்தையும் செய்ய முடியவில்லை. ஆகவே, பல்வேறு கூறுகளாய்ப் பிரிந்து கிடக்கின்ற மக்களைத் தங்கள் தாய் மொழியே வலுவாக இணைப்பதால், அம்மொழி சார்ந்த தேசிய இன உறவிலும், அத்தேசிய இன விடுதலைக்குள் தங்கள் குமுக மற்றும் வகுப்புச் சம நிலைக்கான போராட்டத்தில் மக்களை அணி சேர்த்தும் இயங்குவதுதான் இங்குள்ள குமுக மற்றும் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றதாகும்.

மதம்: பல்வேறு இனக்குழுக்களை அல்லது சாதிகளை அம்மக்களின் தொடக்கக்கால உணர்வுகளோடு அவர்களை ஒருங்கிணைத்து, ஆளுமை செய்வதற்குக் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப உருவாக்கப்பட்டதுதான் பல்வேறு மதவியல் கருத்துகள். அறிவியல் வளராத காலக்கட்டத்தில் மக்கள் தங்கள் வாழ்நிலைக்கேற்ற நம்பிக்கைகளிலும் பழக்க வழக்கங்களிலும் தேங்கிக் கிடந்தனர். இந் நிலையை நிலவுடைமையரும் மத குருமார்களும் தங்களின் மேலாண்மையைச் செலுத்துவதற்குப் பயன்படுத்திக் கொண்டனர். இன்று இந்தியாவில் பல்வேறு மதவியல் கருத்துகளில் மக்கள் மயங்கிக் கிடந்தாலும், சாதிய ஏற்றத் தாழ்வை அடிப்படையாகக் கொண்ட—ஆரியப் பார்ப்பனிய மதமாகிய இந்து மதத்திலேயே பெரும்பான்மையான மக்கள் விலங்கினும் கீழாக புழுப் போல் துடிக்க வைக்கப் படுகின்றனர்.

Scanned with CamScanner

வல்லாண்மைச் சாதியராலும் தரகு முதலாளிகளாலும் இந்திய அரசியல் சார்போடு இம் மதம் நிலை நிறுத்தப்படுகிறது. இம்மதவியல் கருத்தியல்களில் மக்கள் மேலோட்டமாக ஒன்றியிருந்தாலும், குமுக நிலையான சாதிப் பிரிவினைகளாலும், பொருளியல் சார்ந்த வகுப்பு(வர்க்க)ப் பிரிவினைகளாலும், மொழியியல் சார்ந்த இனவியல் வேறுபாடுகளாலும் இம் மதவியல் கட்டமைப்பு உடைக்கப்படுவதற்கான அரசியல் சூழல் உருவாகி விட்டது. சாதியுணர்வும் மதவுணர்வும் மொழி சார்ந்த இனவியலோடு நெருக்கமான உறவு கொண்டிருப்பதாலும், இவ்விரண்டு வேறுபாட்டு மனவுணர்வுகளும் இன உறவுக்குள் அடக்கமாகி விடுவதாலும், குமுக மற்றும் வகுப்புச் சமநிலையை நோக்கிப் போராடுபவர்கள் தங்கள் சாதிய மதவியல் சார்புகளை விலக்கி விட்டுத் தமிழ்த் தேசிய இனச் சிந்தனைக்குப் படிப்படியாக வந்துதான் தீர வேண்டும். குமுக இயங்கியல் நெறியும் அவ்வாறே இருக்கின்றது.

இன உணர்வும் வகுப்பு(வர்க்க)உணர்வும்: மொழிசார்ந்த இனவுணர்வுக்கும் பொருள் சார்ந்த வகுப்புணர்வுக்கும் உள்ள உறவுகளையும் பிணக்குகளையும் நாம் நுட்பமாக எண்ணிப் பார்க்க வேண்டும். பின் தங்கிய நிலைகளில் வாழ்கின்ற பெரும்பான்மையான மக்களுக்கு உழைப்பு மற்றும் பொருளியல் சார்ந்த அறிவுணர்வை அடிப்படையாகக் கொண்ட வகுப்பு(வர்க்க)ச் சிந்தனை வருவதற்கு முன், மன உணர்வை அடிப்படையாகக் கொண்ட, —தாங்கள் சார்ந்து வாழ்கின்ற மக்களின் சாதி, மதம், மொழி, இனம் போன்ற உறவுகள் முன்னுக்கு வந்து விடுகின்றன. இதிலும் சாதியும் மதமும மொழி சார்ந்த இனவுறவுக்குள் அடக்கமாகி, வளர்ந்து வருகின்ற தேசிய இனத்திற்குள், இறுதியில் உழைக்கும வகுப்பாகவும் சுரண்டும் வகுப்பாகவும் இரு பெரும் பிரிவுகள் உருவாகி விடுகின்றது. ஒவ்வொரு தேசிய இனத்திலும் உள்ள ஆளும் வகுப்பு மொழி, கலை, இலக்கியம், பண்பாடு போன்ற உளவியல் உணர்வுகளையும் பொருளியல் சார்ந்த வகுப்பு பிரிவுகளையும் உள்ளீடாகத் தன் வயப்படுத்திக் கொண்டு, புற நிலையாக தன் அரசியல் அதிகாரத்தைச் செலுத்தி மற்ற தேசிய இனங்களை அடிமைப் படுத்துகின்றன அடிமையுண்ட தேசிய இனங்களும இவைகளையே எதிர் நிலையாகக் கைக் கொண்டு தங்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபட முயலுகின்றன. ஒரு தனி மனிதனிடத்திலும் அல்லது ஒரு தேசிய இனத்திலும் இனவுணர்வும் வகுப்பு(வர்க்க) உணர்வும குமுக இயங்கியல் சூழலுக் கேற்ப இணைந்தும் முரண்பட்டும் இயங்குகின்றன. மேலும் அடிமையுண்ட ‘ஒரு தேசிய இனம் பொருளியல் சார்ந்த வகுப்பு உரிமைகளுக்கும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தங்களோடு பினனிப் பிணைந்து வளர்ந்த மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, நாகரீகம் போன்ற மரபுகளைக் காத்துக் கொள்வதற்கும் போராடுகிறது.

இதிலும் ஒரு தேசிய இனத்திற்குள்ளேயே ஆளும் வகுப்பு தூக்கிப் பிடிக்கும் மரபுக் கூறுகளுக்கும் அடித்தள பாட்டாளி மக்கள் பின் பற்றுகின்ற கலை, இலக்கியப் பண்பாட்டிற்கும் வேறுபாடுகள் இருக்கும். அடிமையுண்ட தேசிய இனம், தன் விடுதலைக்காக மற்ற முரண்பாடுகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இன முரண்பாடு முன்னுக்கு வந்து போராட்ட நிலைக்கு வரும்போது, அடித்தள பாட்டாளி மக்களுக்குத் தலைமையேற்கின்ற பாட்டாளியச் சிந்தனையாளர்கள் வகுப்பு (வர்க்க) உள்ளடக்கத்தோடு, மக்களின் மன உணர்வுகளோடு நேரடித் தொடர்புள்ள மொழி, கலை, இலக்கியம், பண்பாடு போன்ற மரபுக் கூறுகளை முன்வைத்து, புற நிலையாக மக்களை ஒருங்கிணைக்கத் தவறி விட்டால், அத் தேசிய இனத்திலுள்ள நிலவுடைமை மற்றும் தரகு முதலாளிய சிந்தனையுடைய ஆளும் வகுப்பு இவைகளை முன் வைத்து, அதிகாரத்தைக் கைப் பற்றிக் தங்கள் வகுப்பு நலனைக் காத்துக்கொள்ளும். திராவிட இயக்கத்தாலும் பொதுவுடைமை இயக்கத்தாலும் எழுச்சி கொண்ட தமிழ்த் தேசிய இன அடித்தள பாட்டாளி மக்கள் அவ்வியக்கங்களின் தலைமைகளால் இரண்டகம் செய்யப்பட்டதாலேயே, தமிழ்த் தேசிய இனமும் பாட்டாளி மக்களும் தொடர்ந்து ஆரியப் பார்ப்பனியத்திற்கும் வட இந்திய தரகு முதலாளியத்திற்கும் அடிமையாகவே கிடக்கின்றன.

தமிழ்த் தேசிய இன விடுதலையும் குமுக மாற்றத்தின் இடைநிலைக் கட்டமும்:

தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை குமுக மாற்றத்தின்—படிநிலை வளர்ச்சியின் இடைநிலைக் கட்டமாகவே நாம் கருத வேண்டும். இறுதிக் கட்டத்தை நாம் இப்பொழுதே எதிர்பார்க்க முடியாது. குமுக அமைப்பு எவ்வாறு தொல் பொதுவுடைமைநிலை, அடிமைக் குமுகாய நிலை, நிலவுடைமைக் காலக் கட்டம், முதலாளியக் காலக்கட்டம், நிகரமைக்(சோசலிச)காலக்கட்டம்பொதுவுடைமை காலக் கட்டமென மாறியும்—மாறிக் கொண்டும் வருகின்றதோ, அவ்வாறே அங்கங்குள்ள குமுக, பொருளியல், அரசியல் சூழலுக்கேற்ப தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் உலகம் முழுவதும் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இனவியல் சார்புடைய தேசிய முதலாளிகளின் போராட்டம்—என்று அடித்தள பாட்டாளி மக்களுக்குச் சரியான வழியைக் காட்டாமல், வேறு வழியைக் காட்டுவது குமுக இயங்கியலைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், தமிழ்த் தேசிய இனத்திற்கு மேலும் மேலும் இரண்டகம் செய்தவர்களாவோம். அடிமைப் படுத்துகின்ற ஒரு தேசிய இனத்

தின் ஆளும் வகுப்பு இன வெறியையும் மத வெறியையும் பின்புலமாகக் கொண்டு மற்றொரு தேசிய இன மக்களை இன அழிப்புச் செய்யும் போது, அடிமைப்படுத்துகின்ற தேசிய இனத்தின் பாட்டாளி வகுப்புத் தலைமையும் அடிமையுண்ட தேசிய இனத்தின் பாட்டாளி வகுப்புத் தலைமையும் மக்களுக்கு சார்பாய் இல்லாமல், உலகப் பாட்டாளி மக்களின் ஒற்றுமை பேசியும் அறவழிப் போராட்டங்கள் நடத்தியும் தங்கள் இரண்டகத்தைச் செய்வது; புலியோ அல்லது அரிமாவோ நம்மைக் கொல்ல வரும்போது, நம் பக்கத்திலிருக்கின்ற உறவினர்கள் அவ்விலங்குகளைத் தாக்காமல், 'பிற உயிரினங்களை கொல்லாமை' என்ற நடைமுறைக் கொவ்வாத நெறியைக் கடைப்பிடித்து, நம்மை அழித்துக் கொள்வதற்கு ஒப்பாகும்.

குமுக மாற்றமும் உள் முரண்பாடும்:

ஒரு பொருளின் வளர்ச்சி அல்லது மாற்றம் உள் முரண்பாடுகளிலிருந்தே முகாமையாகத் தீர்மானிக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, ஒரு மரத்திலுள்ள பழம்—அரும்பாகி—மலராகி—பிஞ்சாகி—காயாகி—கனியாவதைப் போல், குமுக வளர்ச்சியும் படிப்படியாக மாறி வருகின்றது. குமுக அமைப்பு அடித்தளத்திலுள்ள மக்களின் உழைப்பு, பொருள் உற்பத்தி, உற்பத்தி முறைகளின் மாற்றம் போன்ற உள் முரண்பாடுகளிலிருந்தே மாற்றமடைகின்றது. எனினும் உழைப்பையும் உற்பத்திப் பொருள்களையும் கைப்பற்றுகின்ற—உற்பத்தி உறவுகளைச் சேர்ந்த—மேல் தளத்தினர், அடித்தளத்திலுள்ள மக்களைத் தங்களுக்குச் சார்பாகவோ அல்லது கிழாகவோ அடக்கி வைத்துக் கொள்ள முடியும். ஆனால் தொடர்ந்து நீண்ட காலத்திற்குத் தடைபடுத்த முடியாது. ஆகவே குமுக அமைப்பின் உள் முரண்பாடுகளை விளக்கப்படுத்தியும், கூர்மையாக்கியும், பொது எதிரியை அடையாளம் காட்டினால் தான், தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையை வேகப்படுத்தவும், அடித்தள மக்கள் அனைத்து நிலைகளிலும் விரைந்து சமநிலை எய்தவும் முடியும். குமுக இயங்கியல் மெய்ம்மத்தை (தத்துவத்தை) நாம் சரியாகக் கையாளாமல் **இனவியல்** கொள்கையையும் **வகுப்பியல்** (வர்க்க) கொள்கையையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பது நம்மை ஒரு குழப்ப நிலைக்கும் தேக்க நிலைக்குமே இட்டுச் செல்லும்.

முடிவுரை: இன்று தமிழ்நாட்டில் வாழ்கின்ற மக்கள் பல்வேறு வகையான குமுக, பொருளியல், அரசியல் நிலைகளில் அழுத்தப்பட்டுக் கிடந்தாலும், இந்த அழுத்தங்களுக் கெல்லாம் மூல காரணமாக இருப்பது ஆரியப் பார்ப்பனியமும் தரகு முதலாளியமும், இவ்விரண்டும் தொடர்பு கொண்டுள்ள உலக முதலாளியமுமாகும். இம்மூன்று ஆற்றல்களோடும் தங்களை இணைத்துக் கொண்டு, தமிழ்த் தேசிய இன மக்களை ஒடுக்கிச் சுரண்டுகின்ற வல்லாண்மைச் சாதியர், சிறு தரகு முதலாளிகளை அடையாளம் கண்டு, நமக்கு எதிரணியில் நிறுத்த வேண்டும். தமிழ்த் தேசிய இன மக்களின் விடுதலைக்கு, உழைப்பு—பொருள் உற்பத்தி—உற்பத்தி உறவுகள் வழியிலான குமுக இயங்கியலையும் மக்களின் வேறுபாட்டு உணர்வுகள் அனைத்தும் மொழி உணர்விலும் உறவிலும் ஒருங்கிணைவதால், மொழி வழியான இனவியலையும் ஒருங்கிணைத்து முன்னிலைப்படுத்த வேண்டும். அதிலும் இன்றைய காலக் கட்டம் தமிழ்த் தேசிய இனத்தை முழுமையாகச் சிதைத்து—அழிக்கின்ற முயற்சியில் இந்திய தேசிய ஆளுமையரும், சிங்கள தேசிய ஆளுமையரும் ஈடுபட்டிருப்பதால் வகுப்பியலை (வர்க்கம்) இனவியலுக்குள் உட்படுத்தி **தமிழ்த் தேசிய இன ஒற்றுமை உணர்வோடு பொது எதிரிகளை நாம் எதிர்கொள்ள வேண்டும்.** பொது எதிரியை நோக்கி நாம போராடும் போதுதான் ஏற்கனவே நமக்குள் இருக்கின்ற சிறு சிறு வேறுபாடுகளை விட்டு விட்டு ஒருங்கிணைய முடியும். O

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ! ஓ! தமிழர்களே

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத்தாள் பதிப்பு: 9-00
செய்தியச்சுத்தாள் பதிப்பு: 6-50
நூல் அஞ்சல் செலவு: 3-00

ஆசிரியர், தென்மொழி, சென்னை-5

பெறுநர்

நூல்-அஞ்சல்

TN/MS (C)657